Tsi12T

09-12-24

**தென்காசி மாவட்டம்**

**அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024**

**வகுப்பு 12**

**பொதுத்தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களுக்கும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

குறிப்பு : விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

1) சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

2) வெள்ளச் சமவெளிகள் அழியக்காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

3) 'உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்'
- இத்தொடரில் இடம்பெற்றுள்ள பெயரெச்சம்

அ) வளர்ந்த ஆ) உண்டு இ) இடந்தனில் ஈ) பிறந்து

4) மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி:

அ) அங்கதம் ஆ) குறியீடு இ) தொன்மம் ஈ) படிமம்

5) நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை

இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

6) தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம்

அ) எழும்பூர் ஆ) சென்ட்ரல் இ) இராயபுரம் ஈ) கிண்டி

7) பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக

அ) அறம் - 1) கர்ணன்
ஆ) வலிமை - 2) மனுநீதிச் சோழன்
இ) நீதி - 3) பீமன்
ஈ) வள்ளல் - 4) தருமன்

அ) 3 2 1 4 ஆ) 4 3 2 1 இ) 2 4 3 1 ஈ) 4 3 1 2

8) பூமணிக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத்தந்த நூல்

அ) வெக்கை ஆ) பிறகு இ) அஞ்ஞாடி ஈ) கொம்மை

9) அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?

அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்

இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

10) பொருத்துக

அ) ஆமந்திரிகை - 1) படத்து யானை
ஆ) அரசு உவா - 2) மூங்கில்
இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்
ஈ) கழை - 4) எடை அளவு

அ) 3 1 4 2 ஆ) 1 2 3 4 இ) 4 2 1 3 ஈ) 4 3 2 1

11) தவறான இணையைத் தேர்க

| பாவகை | இலக்கியம் |
|---|---|
| அ) விருத்தப்பா | - நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - அகநானூறு |
| இ) கலிவெண்பா | - தூது |
| ஈ) குறள்வெண்பா | - திருக்குறள் |

12) திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர்
அ) லூமியர் சகோதரர்கள் ஆ) ஜார்ஜ் மிலி
இ) தாமஸ்ஆல்வா எடிசன் ஈ) தியோடர் பாஸ்கரன்

13) காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல் எது?
அ) தொல்காப்பியம் ஆ) தண்டியலங்காரம்
இ) வீரசோழியம் ஈ) இலக்கண விளக்கம்

14) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** 3×2=6

15) இறைமகனாரின் இன்னலைக்கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?
16) கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று-பொருள் கூறுக
17) எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
18) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2×2=4

19) அக்காலத்துக் கல்விமுறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
20) 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.
21) பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக** 7×2=14

22) வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
23) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) பகைத்த ஆ) கலங்கி
24) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) பெருந்தேர் ஆ) எத்திசை
25) பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்
களம் - கலம்
26) கலைச்சொல்லாக்கம் தருக.
அ) Animation ஆ) Internet Banking
27) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக
மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன
28) தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.
வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும்
யானைக்குட்டியும் கண்டேன்
29) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்
30) கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக
அ) கபிலன் திறமையானவர் என்று ............ (குமரன்) தெரியும்
ஆ) நேற்றுமுதல் .......... (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2×4=8

31) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?
32) சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக
33) மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.
34) கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** **2×4=8**

35) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக

36) திரைபடத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக

37) மழைவெள்ளப் பாதிப்பிலிருந்துகாத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

38) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** **3×4=12**

39) அ) எப்பொருள் யார்யார்வாய்க கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**(அல்லது)**

ஆ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக**

**(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக்கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன் !
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன்

- நா.காமராசன்

41) அ) பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக

**(அல்லது)**

ஆ) பரிசில் துறையைச் சான்று தந்து விளக்குக.

42) அ) பின்வரும் பழமொழி வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக

அ) யானைக்கும் அடிசறுக்கம்

**(அல்லது)**

ஆ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

43) **தமிழாக்கம் தருக**

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

43) **செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டுமே எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்திய போது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர் தான் 'நாவல்ராணி' 'கதா

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



மோகினி' 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ (வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி ஆவார்.

**வினாக்கள் :**

1) ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் யார்?
2) வை.மு.கோதைநாயகியின் படைப்பாற்றலை ஊக்குவித்தவர் யார்?
3) வை.மு.கோதைநாயகி அவர்கள் எழுதிய முதல் நாடக நூல் எது?
4) 'கதா மோகினி' என்று அழைக்கப்பட்ட பெண் எழுத்தாளர் யாரிடம் கல்வி கற்றார்?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3×6=18**

44) அ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம்வழி நின்று நிறுவுக

**(அல்லது)**

ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிருத்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45) அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம்பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46) அ) 'கோடைமழை' கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) மகா நடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

47) **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

அ) 'பாதகர் குழுமி' ......... எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'செயல்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

- - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com